**G.W.O.P. No. 676/2021**

**16.04.2025**

**ம.த.சா. 1- திரு. அருணாச்சலம், த/பெ. நாகராஜன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**நேரம் 17.05 மணி**

என் மனைவி என்ன படித்துள்ளார் என்றால் எம்.டெக் படித்துள்ளார். திருமணத்திற்கு முன்னர் என் மனைவி பணிபுரிந்தாரா என்றால் பணிபுரிந்ததாக கூறினார். திருமணத்திற்கு பிறகு பணி செய்தார்களா என்றால் இல்லை. என்னுடைய மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் என் மனைவி மனநோயாளி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் Abnormal behaviour என்று குறிப்பிட்டுள்ளேன். Abnormal behaviour என்பதற்கு மனநல மறுவாழ்வு மையத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை நான் மருத்துவரிடம் அழைத்து சென்றேன். என் மனைவி 8 ஆண்டுகாலமாக மனநலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்று என்னுடைய மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் 8 ஆண்டுகளுக்கும் மேல் என்று கூறியுள்ளேன். என் திருமணத்திற்கு முன்பும், பின்பும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. Abnormal behaviour என்று தான் கூறியுள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியாது என்றால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் மனநலம் பாதிக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் மனநோயாளிக்கான டாக்டர் என்று பத்தி 5ல் கூறியுள்ளேன். என் மனைவியின் விருப்பத்தின் பேரில் தான் விவாகரத்து வழக்கு தொடுத்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு இருதரப்பினரும் சேர்ந்து தாக்கல் செய்யும் வழக்கா அல்லது நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்கா என்றால் நான் தாக்கல் செய்த விவாகரத்து வழக்காகும். நான் என் மனைவியுடன் பலமுறை சேர்ந்து வாழ நான் முயற்சிசெய்தபோதும் என் மனைவி சேர்ந்து வாழ வரவில்லை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தவுடன் என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ கோரி நாகர்கோயில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

மனநலம் பாதிக்கப்பட்டது என்பது வேறு மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் நடந்துகொள்வது வேறு என்றால் அதை பற்றி புரிந்து கொள்வதற்காக தான் மருத்துவரிடம் அழைத்து சென்றேன். அங்கு மருத்துவர் என்ன கூறினார் என்றால் கவுன்சிலிங்கில் அமரவைத்து பேசினார். என் மனைவிக்கு மாத்திரை கொடுத்தார். அந்த மருத்துவ சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை கேட்கும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னுடன் என் அப்பா, என் அம்மா, என் மகன், என் அம்மாவின் அம்மா ஆகியோர் வசித்து வருகிறார்கள். அனைவரும் வயது முதிர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

**<u>நேரம் 17.20 மணி</u>**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.